# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 71 ஆம் இலக்க, பிரேமதாச ஹேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 71 ஆம் இலக்க, பிரேமதாச ஹேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

### பிரேமதாச ஹேகொட மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*ச.வ.ஓ. (கூட்.) 34/2007*

முன்னுரை.

"பிரேமதாச ஹேகொட மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 71 ஆம் இலக்க, பிரேமதாச ஹேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

பிரேமதாச ஹேகொட மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பிரேமதாச ஹேகொட மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக இருப்பவர்களான அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "பிரேமதாச ஹேகொட மன்றம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்.

அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென் பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) அநாதரவான சிறுவர்களுக்கு நலன்புரி நிலையங் களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஆ) ஊனமுற்ற, உடல் வளர்ச்சி குன்றிய அத்துடன் உள வளர்ச்சி சீரற்ற சிறுவர்களைப் பராமரித்தலும் இச் சிறுவர்களின் வருங்கால நலன்பேணலுக்கு ஒழுங்கு செய்தலும் இது தொடர்பில் உதவிபுரிதலும் ;

(இ) உளவளர்ச்சி சீரற்ற மற்றும் உடல் வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்குத் தேவையான தொழிற்பயிற்சிநெறி களைத் தொடக்கிவைத்தலும் அவர்களது கல்விசார் தேவைப்பாடுகளுக்கு ஏற்பாடு செய்தலும் ;

(ஈ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டிணைந்து தொழிற்பயிற்சி நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(உ) இக்கூட்டுத்தாபனத்துடனும் சமூகப் பணியாளர்கள், விஞ்ஞானிகள், கொடையாளர்கள் ஆகியோருடனும் ஒத்த சமூக குறிக்கோள்களையுடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நலன்புரிச் சங்கங்களுடனும் நல்லுறவை யும் ஒத்துழைப்பையும் அபிவிருத்திசெய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பாவனைக்கும் கூட்டுத்தாப னத்தின் நலன்கருதி வெளிநாட்டிலிருந்து வரும் ஆட்களின் பாவனைக்கும் அவசியமான கட்டடங்களை நிர்மாணித்தலும் அத்தகைய நோக்கங்களுக்கான வசதிகளையும் உபகரணங்களையும் வழங்குதலும் பேணுதலும் ;

(எ) இளைஞர்களின் குணாதிசியங்களை உருவாக்கும் நல்விழுமியங்களையும் தகுந்த நடத்தையையும் அவர் களுக்குக் கற்பித்தல் ;

(ஏ) சிறுவர்கள் நாட்டின் நற்பிரசைகளாக உருவாகும் வகையில் ஒவ்வொரு அம்சத்திலும் அவர்களுக்கு உதவுதல் ;

(ஐ) குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் நலன்கருதி முன்னிலைப் பாடசாலைகளைத் தாபித்தலும் பேணுதலும் முன்னிலைப் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு பாடநெறிகளை நடாத்துதலும் ;

(ஒ) பொருட்களை வழங்குவதன்மூலமும் வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் ஓவியர்களின் நலன்களை ஊக்குவிப்பதன்மூலமும் பாதுகாப்பதன் மூலமும் பாரம்பரிய கலாசார ஓவியங்களை ஊக்குவித்தலும் ;

(ஓ) ஏனைய நாடுகளுடன் கலாசாரப் பரிவர்த்தனை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் ;

(ஔ) இலங்கையின் இயற்கை வளங்களைப் பேணிக்காத்தலிலும் அபாயத்திற்காளாகும் உயிரினங்கள், விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் ஊர்வன என்பவற்றின் பாதுகாப்பில் துணைபுரிதலும் இயைபான நிறுவனங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குதலும் ;

(க) கருத்தரங்குகள், செயலமர்வுகள், கருத்திட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும் இத்துறையிலுள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் உறவுகளைப் பேணுதலும் ; அத்துடன்

(ங) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் விரும்பத்தக்கவையென கூட்டுத்தாபனம் கருதக்கூடியவாறான புத்தகங்களையும், தகவல் ஏடுகளையும், துண்டுப் பிரசுரங்களையும் சஞ்சிகைகளையும் அச்சடித்தலும், வெளியிடுதலும் விநியோகித்தலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் இனம், சாதி, சமயம், மொழி, பால் அல்லது அரசியல் அபிப்பிராயம் என்ற அடிப்படைகளிலான வேறுபாடுகள் இல்லாமல் அத்தகைய நடைமுறைப்படுத்தலானது நிறைவேற்றப்படுவதனைக் கூட்டுத்தாபனமானது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும், மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படக் கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் அத்தகைய விதிகளுக்கமைய தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர்,

துணைப்பொருளாளர் ஆகியோரையும் பொதுக்கூட்டமொன்றில் நியமிக்கப்படவேண்டியவர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட வேண்டியவர்களுமான ஐந்து குழு உறுப்பினர்களையும் கொண்ட சபையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) முதலாவது முகாமைச்சபையின் உறுப்பினர்கள் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன்முற்போந்த தேதியன்று பதவிவகிக்கும் கழகத்தின் நிருவாகசபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்வரை அவர்கள் பதவி வகித்தலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் இடாப்பு.*

**5**. முகாமைச்சபை இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும். இதில் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இருக்கும் ஒவ்வோர் ஆளும் அதன் பின்னர் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறையாக சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை பதிவுசெய்வித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக் கூடியவாறான காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்குப் பெறுதல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஆ) காசாகவோ அல்லது பொருளாகவோ நிதிகளைத் திரட்டுதல், அத்துடன் மானியங்களை, அன்பளிப்புக்களை அல்லது நன்கொடைகளைப் பெறுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுதல் அல்லது நிறுவச் செய்வித்தல் ;

(ஈ) மாற்றுண்டியல்களையும், காசோலைகளையும், வாக்குறுதிப்பத்திரங்களையும் ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், தள்ளுபடிசெய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் அத்துடன் வழங்குதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச் சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புகளையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்றுதல், ஏற்றுக்கொள்ளல், நிறைவேற்றுதல், புரிதல் அத்துடன் நிருவகித்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும், நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவிநீக்கம் செய்தல் அல்லது அவர்களது சேவைகளை முடிவுறுத்துதல் அத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக ஆளணியினரை இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்றுவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காக, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களின் ஒவ்வொரு வகுப்பினராலும் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்துக்கொள்ளல், மீளப்பெறுதல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் ;

(ஆ) முகாமைச்சபையைத் தெரிவுசெய்தல், பதவிதாங்குநர் கள் பதவியை வறிதாக்குதல், அவர்களைப் பதவி யிலிருந்து நீக்குதல் அத்துடன் முகாமைச்சபையின் தத்துவங் கள் மற்றும் கடமைகள், பணிகள் அத்துடன் நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களையும், முகவர்களையும், சேவையாளர்களையும் நியமனம் செய்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவி நீக்கம் செய்தல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் அத்துடன் அவர்களின் நடத்தை மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்குதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின், முகாமைச்சபையின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டு வதிலும் அவற்றை நடாத்துவதிலும் அனுசரிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, வெற்றிடங்களை நிரப்பு தல், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள் நிகழ்ச்சிநிரல், அவற்றுக்கான கூட்ட நடப்பெண் அத் துடன் அவற்றில் அலுவல்களை மேற்கொள்ளுதல் ;

(உ) முகாமைச்சபையிலும் கூட்டுத்தாபனத்திலும் உறுப் பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங் களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அத்துடன் அதன் குறிக்கோள் களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்பட லாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டிருத் தல் வேண்டும் என்பதுடன், அதன் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்த கைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான தனியாள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9**. கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, கொடை, மானியக்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப் படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத் தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமை வாகவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படு தலும் வேண்டும்.

*கழகத்தால் செலுத் தப்படற்பாலதான அல்லது கழகத்துக் குச் செலுத்தப்பட வேண்டிய தனிசுகள்.*

**10**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று இருக்கின்றதான கழகத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று கூட்டுத் தாபனத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், செலுத்தப் படற்பாலனவான சந்தாப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத் தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படு வதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் ஒழிக்கப்படுவதன் அல்லது கலைக்கப் படுவதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப் பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப் படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு உடன்முன்னர் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் தலைவரின் அல்லது அவர் இல்லாதவிடத்து, முகாமைச்சபை யால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு இரண்டு ஆட்களின் முன்னிலையிலல்லாது, எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந் தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதலானது சாட்சிக்காரராக எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்று தனி வேறானதாதல் வேண்டும்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், அல்லது அரசியல் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்